மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.107/2019

வாக்குமூலம். வா.சா. 3

| பெயர் | சுரேஷ்குமார் | ஜாதி | |
|---|---|---|---|
| த/பெ. | சுந்தர்ராஜ் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 42 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 06-04-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. நான் தாக்கல் செய்த நி்ருபண வாக்குமூல விபரங்கள் வாதி தான் சொன்னார் என்றால் சரிதான். தாவா கிராமத்தில் பெருண்பாண்மை சமூகத்தினர் கிருஸ்தவர்கள் என்றால் சரிதான். நான் இந்து சமூகத்தைச் சார்ந்தவர் என்றால் சரிதான்.**

**2)ஏகணிவயலில் உள்ள சார்ச் பெயர் ஆரோக்கியமாதா என்றால் சரிதான். மேற்படி சார்ச்சின் தேர்பவணி ஏகணிவயல் தெரு சாலைகளை சுற்றி வருவது வழக்கம் என்றால் சரிதான்.**

**3) வழக்கிற்குப் பின்னிட்டு தான் மேற்படி சர்ச்சின் தேர்பவணி வாதி இடத்தில் செல்லவில்லையென்றால் சரியல்ல. வாதியின் இடம் விஸ்தீர்ணம் 17 ஏர்ஸ் ஆகும். அதனுடைய புல எண் எனக்குத் தெரியும். மேற்படி 17 ஏர்ஸ்சும் ஒரே தாக்காக இருக்கிறது என்றால் சரிதான்.**

**4) மேற்படி 17 ஏர்ஸ் எந்த வடிவத்தில் இருக்கிறது என்றால் நீள்சதுரமாக இருக்கிறது. வடக்கு தெற்கில் எத்தனை மீட்டர் இருக்கும் என்றால் சுமார் 10 மீட்டர் இருக்கும். கிழக்கு மேற்கில் சுமார் 30 லிருந்து 32 மீட்டர் தோராயமாக இருக்கும்.**

**5) தாவா சொத்தின் புல எண் என்னவென்றால் 199 நான்கு உட்பிரிவுகளாக 199/4 A , 4B, 4C,4D ஆக உட்பிரிவு செய்துள்ளார்கள். 199/4 A வாதியின் பட்டா விஸ்தீர்ணத்தை விட பூஸ்துதியில் கூடுதல் விஸ்தீர்ணம் இருக்கிறது என்றால் இல்லை.**

**6)நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் புல எண். 199/4A யில் உள்ள கூடுதல் விஸ்தீர்ணத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அறந்தாங்கி - கட்டுமாவடி சாலையில் பிரதான சாலைக்கு வடபுறமாக இருக்கிறது என்றால் சரிதான்.**

**7) மேற்படி பிரதான சாலைக்கு வடபுறம் செல்லும் சாலை வழியாகத்தான் திருவங்கூர், ராயன்வயல் கிராம மக்கள் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து செல்லும் பாதையில் மேற்படி திருவங்கூர், ராயன்வயல் மக்கள் சாலையாக 100 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.**

8)வாதியின் பட்டா இடம் இருப்பதாக சொல்லும் இடத்தில் தான் ஆரோக்கிய மாதா தேர்பவணி பன்னெடுங்களாமாக நடந்து வந்தது என்றால் சரியல்ல. வாதி அவருடைய பட்டா இடத்தில் சென்று கொண்டு இருந்த பாதையை அடைத்ததால் தான் வட்டாட்சியர், வி.ஏ.ஓ முள்வேலியைப் பிரித்தார்கள் என்றால் சரியல்ல. பாதை இருந்து இருந்தால் தான் அடைத்து இருப்பார்கள். எனக்கு அறந்தாங்கியில் ஒரு குற்றவியல் வழக்கு மற்றும் ஒரு உரிமையியல் வழக்கு இருக்கிறது.

9)வாதி மாற்று சமூகத்தை சார்ந்த என்னை வழக்கு நடைமுறை தெரியும் என்பதால் சாட்சியாக அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.